**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**MCOP. No. 34 / 2021**
**2026ம் வருடம் ஏப்ரல் மாதம் 17ம் நாள் வெள்ளிக்கிழமை**

**எ.ம.சா.2 – செல்வக்குமார்**

**மனுதாரர் தரப்பில் கு.வி :–**

நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். எங்கள் நிறுவன தனி புலனாய்வு அதிகாரி கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் தான் இந்த வழக்கின் விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு எங்கள் நிறுவனத்தில் காப்பீடு அமலில் இருந்தது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை பொறுத்து விபத்தில் இறந்து போன நபர் 3ம் தரப்பினர் என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட பின்பு தான் மாதிரி வரைபடம் காவல் துறையினர் தயார் செய்வார்கள் என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தை வைத்து யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்பதை முடிவு செய்யமுடியாது என்றால் சரியல்ல. இந்த விபத்து 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளதால் காப்பீட்டாளர் என்ற முறையில் எங்கள் நிறுவனம் தான் மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த விபத்து சம்மந்தமான குற்ற வழக்கின் தீர்ப்பு இந்த தீர்ப்பாயத்தை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
**மானாமதுரை**